**பதவி ஸ்ரீ புர பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியன்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவி ஸ்ரீ புர பிரதேச சபையின் நிதி நிலமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகன வாடகை வருவாய் பதிவேட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் ரூபா 2,350,001 ஆகும். எவ்வாறாயினும், அதனை ரூபா 2,280,555 ஆக வருவாய், செலவினக் கணக்கில் சேர்த்துக் கொண்டமையால் வருவாய் ரூபா 69,446 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 4,385,000 பெறுமதியான பஸ் வண்டி மூலதனமாக்கப்படவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 2 டிறக்டர் வண்டிகள் மற்றும் 1 மோட்டார் சைக்கிள் என்பவற்றினது பெறுமதி மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

நிதி மற்றும் நிர்வாக விதி 217 க்கமைய நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,598,815 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,630,456 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேறு ரூபா 5,968,359 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிற வருவாய் மற்றும் சேவைக் கட்டணம் ரூபா 5,000,000 அதிகரித்தமையே மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 5,968,359 அதிகரிப்பு ஏற்படப் பிரதான காரணமாக அமைந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 185 ஆம் விதியின் பிரகாரம் சபையின் பணமானது நாளாந்தத் தேவைகளுக்கு மேற்பட இருப்பதாகக் கருதுமிடத்து சபையின் இணக்கத்துடன் அது வங்கியொன்றில் நிலையான வைப்பிலிடப்படலாம். எவ்வாறாயினும், சபையின் நடைமுறைக் கணக்கில் 2016 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாத முடிவிலும் ரூபா 41 இலட்சத்திற்கும் ரூபா 85 இலட்சத்திற்கும் இடையேயான தொகை இருந்தபோதும் இம்மேலதிகத் தொகையை நிலையான வைப்பில் முதலீடு செய்து வருவாயை ஈட்டுவதில் கவனஞ் செலுத்தப்படவில்லை.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2016 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| குத்தகை வாடகை | 1,062 | 1,109 | 123 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 349 | 289 | 15 |
| ஏனைய வருவாய் | 8,461 | 12,379 | 3,500 |

(ஆ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொலைத்தொடர்புக் கோபுரங்களைப் பேணுவது தொடர்பாக சபை உப விதிகளை அமுலாக்கி குறித்த நிறுவனங்களிடமிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையால் சபை சம்பாதிக்கக் கூடியதாகவிருந்த வருவாய் இழப்பிற்குள்ளானது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை ரூபா 102,683,386 பெறுமதியான காணியினது சட்டபூர்வ உரித்தைப் பெறவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் போக்குவரத்து வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபைக்கு உள்ளூராட்சி அமைச்சால் வழங்கப்பட்ட 03 வாகனங்களது உரித்தைச் சபை சுவீகரிக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2016 இன் கீழ் 30 வீதி விளக்குகளுக்கான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சபை 2017 சனவரியில் ரூபா 99,065 செலவிட்டிருந்தபோதும், அதில் 01 மாத்திரமே பொருத்தப்பட்டு ஏனையவை 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் சபையின் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) ஆயுர்வேத வைத்திய நிலையம் இல்லாத இந்த பிரதேச சபையில் மருத்துவர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டமையால் மருத்துவர் மூலம் ஆக்கபூர்வமான சேவையைப் பெற முடியாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் சமுதாய ஒத்துழைப்புடன் குழாய்களை பொருத்துவதற்காக பிரதேச சபைக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட UPVC குழாய்கள் மற்றும் பொருத்திகளுள் எஞ்சிய ஏறக்குறைய 3000 குழாய்க் கையிருப்பினது அண்ணளவான பெறுமதி ரூபா 1,200,000 ஆகும். அவை ஜயந்திவெவ மற்றும் சமன்புர ஆகிய களஞ்சியங்களில் முறையற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அக்குழாய் கையிருப்பை வேறு பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.3.1 புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ஜயந்திவெவ வாரச்சந்தையை நிர்மாணித்தல் -ரூபா.7,682,087

இது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முதலாவது ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பிக்காமையால் இரண்டாவது ஒப்பந்தகாரரிடம் அவ்வொப்பந்தம் ரூபா 8,428,900 பெறுமதியில் 2014 சனவரி 20 அன்று வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 746,803 ஆகும். இதனை முதலாவது ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டபோதும் அறவிடப்பட்டது ரூபா 384,105 மாத்திரமே.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது ஒப்பந்தகாரர் 2014 ஏப்ரல் 19 ஆந் திகதியன்று ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டியபோதும், 2014 ஒக்டோபர் 20 ஆந் திகதியன்றே வேலை நிறைவேறி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் 6.4 ஆம் இலக்க நிபந்தனைப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா 771,244 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2017 யூன் 29 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 3.3.2 பதவி ஸ்ரீ புர டெலிகொம் வீதியைக் கொங்கீரிட்டிடல்

பிரதேச சபைகளை சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2016 இன் கீழ் பதவி ஸ்ரீ புர டெலிகொம் வீதியில் 197 மீட்டர் தூரத்திற்குக் கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 991,610 செலவழிக்கப்பட்டிருந்தது. கொங்கீரீட் இடப்பட்டபோதும், இரு பக்கங்களிலும் சிறு கற்களைப் பயன்படுத்திச் சீர் செய்யாமையால் கொங்கீரீட்டுக்கு இடையேயான ரிஜிபோமை அகற்றி தார் பூசப்படாததால் இவ்வீதி நெடுங்காலம் நிலைத்து நிற்பது பிரச்சினைக்குள்ளானது.

### 3.3.3 சிறு கற்களைப் பயன்படுத்தி வீதியைப் புதுப்பித்தலும் நிர்மாணித்தலும்

2015 டிசெம்பர் 30 ஆந் திகதிய நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 2016/01 இன் 1.2 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக பிரதேச சபைகளை சக்திமிக்கதாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையானது 2016 ஆம் ஆண்டில் 2 வீதிகளை ரூபா 271,798 செலவில் சிறு கற்கைகளைப் பயன்படுத்திப் புதுப்பித்திருந்தது.

### 3.4 சுற்றாடல் பிரச்சினைகள்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திற்கிணங்க சுற்றாடல் பாதிப்படையும் தச்சுத் தொழில் பிளொக் கற்களது உற்பத்தி மற்றும் நெல் ஆலைகள் போன்ற துறைகள் செயற்படும் போது சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். எனினும், சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் செயற்படும் அவ்வாறான 93 தொழில் முயற்சிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் பெறப்படாது வேலை மேற்கொள்ளப்படுவதால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.5.1 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

(அ) 2017 சனவரி 27 ஆந் திகதியன்று ரூபா 485,000 செலவில் நீரின் மாதிரிகளைப் பரிசீலிக்கும் உபகரணத்தையும் நீர் வழங்கும் உபகரணங்கள் இரண்டையும் பிரதேச சபை கொள்வனவு செய்திருந்தபோதும், நீரின் மாதிரியைப் பரிசீலிக்கும் அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் இன்மையால் அவ்வுபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாகப் பயனற்றிருந்தன.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கள் மூலம் 2006 ஆம் ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்ட கெப் வண்டி 2015 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படாது வாகனப் பிரிவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை பழுதுபார்த்ததும் பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

பிரதேச சபைச் செயலாளர், முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர், மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர், சாரதி ஆகிய பதவிகளில் 02 ஆண்டுகள் 04 மாதங்களாக நிலவிவரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை 2017 யூன் 29 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமை** | | **கவனம் மேற்கொள்ளப்பட வேண்டிய துறை** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்களைக் கணக்கிலிடுதல் |
| (ஆ) | வருவாய் நிர்வாகம் | வருவாய் நிலுவையை அறவிடுதல் |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) சுற்றிக்கைப் பிரகாரம் வேலையை நிறைவேற்றுதல் |
| | | (ii) ஒப்பந்தத் தொகையைக் கொடுப்பனவு செய்தல் |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் |